1978 செப்டம்பர் 13]

2. மாவட்ட தலைமை மருத்துவ மனைகள். (1)	திருத்தப்பட்ட கட்டணம். (2)
"ஏ" வகுப்பு அரசு லாலி மருத்துவமனை குனூர் தலைமை மருத்துவமனை, உதகமண்டலம்	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 28.50.
"பி" வகுப்பு (அரசு தலைமை மருத்துவ மனை, உதகமண்டலம், மற்றும் அரசு லாலி மருத்துவமனை, குனூர், தாம்பரம் தவிர மற்ற மருத்துவ மனைகள்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ, 12.50.
"பி" வகுப்பு (அரசு தலைமை மருத்துவ மனை, உதகமண்டலம், மற்றும் அரசு லாலி மருத்துவமனை, குனூர்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 13.50.
"சி" வகுப்பு (மலைப்பகுதியில் உள்ள மருத்துவமனைகளில்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 8.00.
"சி" வகுப்பு (மற்ற மருத்துவ மனைகளில்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 7.00.

இணைப்பு III

(528-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 375க்கான விடையைக் காண்க)

பதில்

தஞ்சை மாவட்டத்தில் பருத்தி சாகுபடியை ஊக்குவிக்க கீழ்க் கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:—

(1) அதிக மகசூல் தரக்கூடிய எம், சி. யு. 7 மற்றும் 'வரலட்சுமி' போன்ற இரகங்கள் சிபாரிசு செய்யப்பட்டு பருத்தி சாகுபடி தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. 1977-78 ஆண்டில் 9,267 ஏக்கரில் இம்மாவட்டத்தில் பருத்தி சாகுபடி செய்யப் பட்டுள்ளது. இதனை 1978-79 ஆம் ஆண்டில் சுமார் 25 ஆயிரம் ஏக்கராவில் விரிவாக்க திட்டமிடப்பட்டுள்ளது, இதற்குத் தேவையான தரமான பொறுக்கு விதைகள் விநியோகிக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

(2) பருத்தி பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு கிராம கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமும் ரகத்திற்கு ஏற்ப (எம்.சி.யு. 7 ரகத்திற்கு ஏக்கருக்கு ரூபாய் 1,000 , வரலட்சுமி ரகத்திற்கு ஏக்கருக்கு ரூபாய் 2,000) பயிர் கடன் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

(3) நிலத்தடி நீரை முழு அளவு பயன்படுத்தி, வரும் மூன்று ஆண்டுகளில் சுமார் ஒரு லட்சம் ஏக்கராவில் பருத்தி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

(4) தஞ்சையிலேயே ஒரு தனியார் ஜின்னிங் பேக்டரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(5) தஞ்சை, குடந்தை, குத்தாலம் முதலிய இடங்களில் உள்ள ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் செயல்படுத்தப்பட்டு பருத்தி விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பருத்தி சாகுபடி அதிகரிப்பதற்கேற்ப ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வருகிற ஆண்டுகளில் பரவலாகப் பல இடங்களில் செயல்படுத்தி பருத்தி விற்பனையில் உள்ள சிக்கல்களை நீக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

(6) தேவையான அளவு உரங்களும், பயிர் பாதுகாப்பு மருந்துகளும், பயிர் பாதுகாப்புக் கருவிகளும் சிரமமின்றிக் கிடைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளையும், இனி சாகுபடி செய்யப் போகும் விவசாயிகளையும் வேளாண்மைத் துறையின் விரிவாக்கப் பணியாளர்கள் அவ்வப்போது சந்தித்து சாகுபடி நுணுக்கங்களை செயல் விளக்கங்கள் மூலம் விளக்கி வருகின்றனர்.

இணைப்பு IV

[529-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 379-க்கான விடையைக் காண்க.]

பதில்.

அகில இந்திய ஒருங்கிணைந்த பருப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இரு மையங்கள் இந்திய வேளாண்மை ஆராய்சிக் கழகத்தின் ஆதரவுடன் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் தற்பொழுது இயங்கி வருகின்றன. 8-12-77 மற்றும் 9-12-77 தேதிகளில் புதுடில்லியில் நடந்த இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் பொதுக் குழுக் கூட்டத்தில் தமிழ்நாட்டிற்கு ஒரு வட்டார பருப்புப் பயறு ஆராய்ச்சி நிலையம் அமைப்பது குறித்து ஒரு திட்டம் முன்மொழியப்பட்டது. ஏற்கெனவே இரண்டு மையங்கள் தமிழ்நாட்டில் செயலாற்றி வருவதால், மேலும் ஒரு நிலையம் அமைக்க மத்திய அரசு இசைவு தாவில்லை. பயறு வகைகளுக்கென்று தனி ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை நடப்பு ஆண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது அமைத்தால்தான் தமிழகம் தனது சுய தேவையை ஓரளவுக்காவது சரிக்கட்ட முடியும் என்றும் தமிழ்நாட்டில் ஒரு வட்டார பயறு ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக இசைவாணை வழங்குமாறும் இந்திய வேளாண்மைக் கழகத்தை இவ்வரசு கோரியுள்ளது.